SMU SINGAPORE MANAGEMENT UNIVERSITY | Centre for Research on Successful Ageing

செய்திக்கடிதம்-இதழ் 04 மே 2021

ROSA செய்திக்கடிதத்தின் இந்நான்காம் இதழில், எங்கள் இரண்டாம் கொள்கை வகுத்தல் வட்டமேசை விவாதம் தொடர்பான புதுப்பிப்புச் செய்திகளை வழங்குவதுடன், ROSA குழுவின் மேலும் இரு உறுப்பினர்களை உங்களுக்கு அறிமுகம் செய்கிறோம். அவற்றுடன், எங்கள் ஆய்வின் பல முக்கியக் கண்டுபிடிப்புகளையும் உங்களுக்கு வழங்குகிறோம்.

## புதுப்பிப்புச் செய்திகள் மற்றும் அறிவிப்புகள்

### இரண்டாம் கொள்கை வகுத்தல் வட்டமேசை விவாதம்: மீண்டு வருவதில் - வயதான பெரியவர்களும் புதிய இயல்புக்கு மாறுதலும்

03 மார்ச் 2021 அன்று ROSA தனது இரண்டாவது கொள்கை வகுத்தல் வட்டமேசை விவாதத்தை நடத்தியது. இந்த வட்டமேசை விவாதம், சிங்கப்பூரின் கோவிட்-19க்குப் பிந்தைய மீண்டுவருதலில் உள்ள இடைவெளிகளைக் குறைக்கும் ஆதார-அடிப்படையிலான கொள்கைப் பரிந்துரைகளை வழங்க முயன்றது. மெய்நிகர் முறையில் நடத்தப்பட்ட இந்த வட்டமேசை விவாதத்தில், 80க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டனர், அவர்களில் 50க்கும் மேற்பட்டோர், சமுதாய மற்றும் குடும்ப மேம்பாட்டு அமைச்சு மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு அமைப்பு போன்ற மூப்படைதல் தொடர்புடைய கொள்கை வகுத்தலில் ஈடுபடுகிற பல்வேறு அரசாங்க அமைச்சுகள் மற்றும் அரசு சாரா அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் ஆவர். ஒட்டுமொத்தமாக, இது ஒரு வெற்றிகரமான நிகழ்வாகும். இந்நிகழ்வினைப் பற்றி உள்ளூர்ச் செய்தி நிறுவனங்களான சேனல் நியூஸ் ஏசியா, தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், லியான்ஹே ஜாவ்பாவ் மற்றும் சி.என்.ஏ 938 செய்திவெளியிட்டன.

### புதுப்பிக்கப்பட்ட ROSA வலைத்தளம்

பார்வையை ஈர்க்கும் வகையில் எங்கள் வலைத்தளத்தை மாற்றியமைத்துள்ளதைப் பகிர்ந்து கொள்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் (நீங்கள் வலைத்தளத்தை rosa.smu.edu.sg-இல் அணுகலாம்). நாங்கள் வலைத்தளத்தை அடிக்கடி புதுப்பிக்கத் திட்டமிட்டுள்ளோம், எனவே நீங்கள் புதுப்பிப்புகளை அறிந்திருக்க விரும்பினால், தவறாமல் எங்கள் வலைத்தளத்துக்கு அவ்வப்போது வரவும். எங்கள் அற்புதமான பணியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் குழு மற்றும் அவர்தம் ஆராய்ச்சிப் பகுதிகள் பற்றி நீங்கள் அவ்வலைத்தளத்தில் மேலும் அறியலாம்.

## ROSA வின் ஊழியர்களைச் சந்திக்கவும்

எங்கள் அணியின் மேலும் இரண்டு உறுப்பினர்களை அறிமுகப்படுத்த இந்த வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புகிறோம் - ஸ்டீபன் ஹோஸ்கின்ஸ் மற்றும் கேத்தரின் லோ!

ROSA-வில் ஒரு முதன்மை இணை ஆராய்ச்சியாளராக, ஸ்டீபன் ஹோஸ்கின்ஸின் வழக்கமான பணிநாள் என்பது கருத்தாய்வுக்கான கேள்விகளை எழுதுவது, எங்கள் செயற்பாட்டுக்குழுவுடன் பணியாற்றி மாதாந்திர கருத்தாய்வுகளைக் களம் காணச் செய்வது, ஆய்வுத்தாள்களை வாசித்தல் மற்றும் SLP தரவு பகுப்பாய்வு உள்ளிட்ட ஆய்வுகளை நடத்துவது, இறுதியாக எங்கள் ஆராய்ச்சி முடிவுகளை நடைமுறைக்கேற்ற கொள்கைத் தலையீடுகளாக மாற்றுவதற்கு அரசாங்கப் பிரதிநிதிகள் அல்லது ஆராய்ச்சியாளர்களைச் சந்திப்பது ஆகியவற்றைக் கொண்டதாகும்.



*ஸ்டீபன் ஹோஸ்கின்ஸ், முதன்மை இணை ஆராய்ச்சியாளர், தனது கடின பணியின்போது!*


சிங்கப்பூரர்களின் சிக்கலான வாழ்க்கையை உணர்த்தும் ஒரு தனித்துவமான ஜன்னலாக SLP-யை ஸ்டீபன் கருதுகிறார். சிங்கப்பூர்த் தொழிலாளர்கள் அதிக திறன் பயிற்சிக்கு எவ்வளவு ஆர்வமாக உள்ளனர், வேலையின்மை அதிர்ச்சிகளுக்குப் பிறகு அவர்கள் எவ்வளவு விரைவாக வேலைக்குச் செல்கிறார்கள், மற்றும் சிங்கப்பூர்க் குடும்பங்களில் தலைமுறைகளுக்கிடையிலான நிதிப் பரிமாற்றங்கள் முக்கியப் பங்கு வகிப்பதை அவர் தனது ஆராய்ச்சியின் மூலம் கண்டுணர்ந்தார். ஸ்டீபன் தனது ஓய்வு நேரங்களில், தன் பைக்கில் சிங்கப்பூரைச் சுற்றி சவாரி செய்வதற்கும், கஃபேக்களில் நாவல்களைப் படிப்பதற்கும், ஃபோர்ட் கேனிங்கில் மெதுவோட்டம் செல்வதற்கும், புவிசார் அரசியல் பற்றி தனது நண்பர்களுடன் விவாதிப்பதற்கும் விரும்புகிறார்.



*ஆய்வுக் குழுவின் மேலாளரான கேதரின் (வலது), மற்றும் அவரது மகள்.*


ROSA வின் ஆய்வுக் குழுவின் மேலாளர் கேதரின் உங்களுக்கு நன்கு பரிச்சயமானவராக இருக்கலாம். ஒரு வழக்கமான பணிநாளில், அவர் SLP-யிடமிருந்து வரும் பின்னூட்டங்களை நிர்வகிக்க மாணவ உதவியாளர்களுடன் நெருக்கமாகப் பணியாற்றுகிறார், கருத்தாய்வுப் பதில் விகிதங்களைக் கண்காணிக்கிறார், அத்துடன் சேகரிக்கப்பட்ட தரவை மேற்பார்வையிடுகிறார். பதிலளிப்பவர்களின் கதைகள், வாழ்க்கை அனுபவங்கள் மற்றும் ஆலோசனைகளைக் கேட்கிற காரணத்தினால், அவர் SLP உடன் பணிபுரிவதை விரும்புகிறார். மேலும், SLP உடன் பணிபுரிவது ஓய்வுக்குத் தயார்நிலை பற்றிய அவரது புரிதலை ஆழப்படுத்தியுள்ளது. பாராட்டுகளைப் பெறுதல் மற்றும் பதிலளித்தவர்களிடமிருந்து நல்வாழ்த்துகளைப் பெறுதல் போன்ற அனுபவங்கள் அவருக்கு மிகவும் பலனளிப்பதாகும். தனது ஓய்வு நேரத்தில், நாவல்களை வாசித்தல் மற்றும் நுட்பங்களையும் மென்திறன்களையும் இணையவழிக் கற்றலை உள்ளமைக்கப்பெற்ற LinkedIn கற்றல் மூலம் கற்பதை அவர் மிகவும் விரும்புகிறார்.

## ஆராய்ச்சியின் சிறப்பம்சங்கள்




*படம் 1: பாலினங்களின் திருமணத் திருப்தி*

டிசம்பர் 2020-இல், SLP உறுப்பினர்களிடம் அவர்களது திருமணத் திருப்தியைப் பற்றி நாங்கள் கேட்டோம். தங்கள் திருமணத்தில் திருப்தி அடைந்ததாகப் பதிலளித்தவர்களின் விகிதத்திலும், திருமணம் இல்லாமல் தங்களது வாழ்க்கை காலியானதாகத் தோன்றும் என்று பதிலளித்தவர்களின் விகிதத்திலும் பாலின வேறுபாடுகளை நாங்கள் கண்டோம். குறிப்பாக, பதிலளித்த பெண்களுடன் ஒப்பிடும்போது பதிலளித்த ஆண்களில் அதிகமானோர் தங்கள் திருமணங்களில் திருப்தி அடைந்ததாகவும், அவர்களின் திருமணம் இல்லாமல் வாழ்க்கை காலியானதாகத் தோன்றும் என்றும் தெரிவித்தனர்.




*படம் 2: SLP உறுப்பினர்களிடையேயான தொண்டூழியம் செய்யும் விகிதங்கள்*

பிப்ரவரி 2021-இல், SLP உறுப்பினர்களிடம் அவர்களது தொண்டூழிய அனுபவங்களைப் பற்றி நாங்கள் கேட்டோம். பதிலாளர்களில் 21% பேர் மட்டுமே முன்னர் தொண்டூழியம் செய்திருப்பதாகவும், 8% பேர் மட்டுமே கடந்த 12 மாதங்களில் தொண்டூழியம் செய்திருப்பதாகவும் அறியப்பட்டது. தொண்டூழியம் செய்துள்ள பதிலாளர்களிடையே இருக்கும் மூன்று பொதுவான காரணங்கள்: (1) சமூகத்துக்குப் பங்களிப்பது நல்ல உணர்வைத் தருகிறது (91.1% ஒப்புக்கொண்டனர்), (2) தொண்டூழியம் வாழ்வுக்கான நோக்கத்தையும் அர்த்தத்தையும் தருகிறது (88.2% ஒப்புக்கொண்டனர்), மற்றும் (3) தொண்டூழியம் செய்வதன் மூலம் உலகை ஒரு நல்ல இடமாக்கலாம் என பதிலாளர்கள் நினைத்தனர் (87.5% ஒப்புக்கொண்டனர்).

தொண்டூழியம் வயதானவர்களுக்குச் சுறுசுறுப்பான வாழ்க்கையை வாழ உதவுகிறது. அதே நேரத்தில் சமூகத்திற்கும் மதிப்புமிக்க சேவைகளை வழங்குகிறது. கூடுதலாக, வளர்ந்து வரும் ஆராய்ச்சிக் குழு ஒன்று தொண்டூழியத்துக்கு மனநல நன்மைகள் இருப்பதாகக் கூறுகிறது. இதைக் கருத்தில் கொண்டு, அதிகமான SLP உறுப்பினர்கள் தங்கள் நல்வாழ்வை மேம்படுத்த தொண்டூழியப் பணிகளில் பங்கேற்க ஊக்குவிக்கிறோம்! RSVP சிங்கப்பூர் போன்ற பல அமைப்புகள் உள்ளன, அவை மூத்தவர்களுக்கு அர்த்தமுள்ள தொண்டூழிய வாய்ப்புகளை வழங்குகின்றன. இப்போது பெரும்பாலான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதால், ஒரு சிறந்த COVID-19க்குப் பிந்தைய உலகத்தை மீண்டும் உருவாக்க நாம் ஒன்றிணையலாம்.

## கருத்தாய்வுகளின் தேதிகள்

- **மே கருத்தாய்வு:** 1 - 24 மே 2021
- **ஜூன் கருத்தாய்வு:** 1 - 24 ஜூன் 2021
- **ஜூலை கருத்தாய்வு:** 1 - 25 ஜூலை 2021

## எங்களைத் தொடர்புகொள்ள

உங்கள் முகவரி அல்லது தொலைபேசி எண்ணை நீங்கள் மாற்றியிருந்தால், கருத்தாய்வை நிறைவுசெய்வதில் உங்களுக்கு ஏதேனும் வகையில் உதவி தேவையென்றால் அல்லது உங்களுக்கு ஏதேனும் கேள்விகளோ அல்லது கருத்துகளோ இருந்தால், தயவுசெய்து 6808 7910 என்ற எங்களுடைய மையத்தின் நேரடித் தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளுங்கள் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, திங்கள் முதல் வெள்ளி வரை) அல்லது slp@smu.edu.sg என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள். உங்களிடமிருந்து கருத்துகளைக் கேட்பதற்கு நாங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியடைகிறோம்.